# முதல்வர் உள்ளங் கையில் - கலைஞரின் உள்ளம் துடிப்பதைப் பார்த்தேன்!

## கவிப்பேரரசு வைரமுத்து நெகிழ்ச்சி!



என்
அன்னையின் மறைவுக்கு
ஆறுதல் கூறிய
முதல் தொலைபேசியே
முதலமைச்சர்தான்;
முதல் இரங்கல் அறிக்கையும்
அவர்தான்!

அந்த ஆறுதல் போதாதென்று
நான் சென்னை வந்ததும்
இல்லம் தேடிவந்து
இருகை பற்றி
இதயம் தடவிக் கொடுத்ததும்
அவர் அன்புதான்!

அவர் உள்ளங்கையில்
கலைஞரின் உள்ளம்
துடிப்பதைப் பார்த்தேன்!

தாயின் மறைவு
எதுகொண்டும் நிரப்பமுடியாத
ஒரு வெற்றிடம்

அதை நிரப்பும் உறவுகளாய்
நாங்கள் இருக்கிறோம் என்று
ஓடிவந்து உணர்த்தியிருக்கிறார்
மாண்புமிகு முதலமைச்சர்!

நன்றி சொல்கிறேன்.

உடன்
அண்ணன் டி.ஆர்.பாலு எம்.பி.
அமைச்சர் சேகர் பாபு
ஆ.ராசா எம்.பி.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 17.05.2025 அன்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28 புதுமாரியம்மன் கோவில் தெரு பகுதியில் கல்வி நிதியின் கீழ் 37.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக்கட்டிடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், நகரப் பொறியாளர் சிவபாதம், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – எஸ்.எஸ்.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர்,மே,20–

அரியலூர் மாவட்டத்தில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டலின் அவர்களின் ஆலோசனையின்படி அரியலூர் மாவட்ட கழக நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தில், கழக முதன்மைச் செயலாளர் , நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், அரியலூர் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் முன்னிலையில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கழக நிர்வாகிகளும் ஒருங்கிணைத்து தேர்தல் பணி மேற்கொள்வது குறித்து ஆலோசனை வழங்கினார். குறிப்பாக கழக அரசின் சாதனைகளை ஒவ்வொரு வீட்டுக்கும் கொண்டு செல்வது நம் தலைவர் அறுவுறுத்திய மக்கள் நல பணிகளை மேற்கொள்வது

கழகத்தின் ஒவ்வொரு அணி சார்பிலும் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்வது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து ஒவ்வொரு நிர்வாகிகளிடமும் விளக்கமாக கேட்டறிந்தார்கள்.

மேலும் நம் தலைவர் அவர்கள் தலைமையிலான அரசு மீண்டும் அமைய ஒவ்வொருவரும் இரவு பகல் பாராமல் உழைக்க வேண்டும் என அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.எஸ்.சிவசங்கர் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், சட்ட திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்ட மன்ற உறுப்பினர் க. சொ. க. கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்பிர மணியன், குன்னம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ஏ.கே.அருண், மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திர சேகரன், லதாபாலு, மாவட்ட பொருளாளர் கு. இராஜேந்திரன்,

ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தனசேகர், இரா. கென்னடி, பூ.செல்வராஜ்,

இரா.மணிமாறன், மா.அன்பழகன்,ரெ. சக்கரவர்த்தி, ரெங்க.முருகன், கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி. எழில்மாறன், இரா.அண்ணாதுரை, ப.தனவேல், தெய்வ. இளையராஜன், நா.கணேசன், பொன். செல்வம், கே.ஜி.எஸ்.முருகன், இரா. செந்தில்குமார், நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் கழக செயலாளர்கள். ப.கோபால கிருஷ்ணன் அ. அல்போன்ஸ், அரியலூர் நகர மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், உடையார் பாளையம் பேரூராட்சி தலைவர் மலர்விழி ரஞ்சித் குமார், வரதராஜன் பேட்டை மாவட்ட அணி அமைப்பாளர்கள் எஸ். ஆர்.இராமராஜன், க.தர்மதுரை, என்.ஆர்.ராமதுரை, ஆதி.இளங்கோவன்,

சி.அந்தோணிசாமி, பானுமதி ராஜேந்திரன், எம்.ஜி.ராஜேந்திரன்,

கே.சி.லூயிகதிரவன், செ.சஞ்சய்குமார், மீனா சாமிநாதன், இரா.ரவிக்குமார், இரா.குலோத்துங்கன், செ. இளஞ்செழியன், வை. முருகானந்தம், க.கருப்புசாமி, க .செல்வராஜ், மா. ஜெயக்குமார், க.அருண்ராஜ், க.இளங்கோவன், ஜோ.வின்சென்ட் ராஜா ஆகியோருடன் சட்ட மன்ற தொகுதி பொறுப்பாளர்கள், மாநில மாவட்ட மாநகரஒன்றிய நகர பேரூர் கிளை கழக நிர்வாகிகள் அனைவரும் திரளாக பங்கேற்றனர்.

### கால்நடை பராமரிப்புத் துறையில்

# அரசின் அறிவிப்புகளை விரைந்து நிறைவேற்றிட வேண்டும்!

## 34 பேருக்கு பதவி உயர்வு ஆணைகளை வழங்கி – அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அறிவுறுத்தல்!

சென்னை, மே. 20 -

தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் இயக்குநர் அலுவலக மாநாட்டுக் கூட்ட அரங்கத்தில் 15.05. 2025 அன்று, 34 அரசு ஊழியர்களின் பதவி உயர்வு ஆணைகளை வழங்கி, அரசு அறிவிப்புகளை விரைந்து முடிக்க மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் அறிவுறுத்தினார்.

மேலும், கால்நடை பராமரிப்புத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

மீன்வளம், மீனவர் நலம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கால்நடை பராமரிப்புத்துறையின் வாயிலாக, கால்நடைகளின் நலனை காக்கவும், விவசாயிகளின் வருமானம் பெருக்கும் நோக்கத்தோடும், செயல்படுத்தப்பட்டு வரும் துறையின் முக்கிய நடவடிக்கைகள், திட்டங்கள், உட்கட்ட மைப்புகள், பண்ணைகள் குறித்த செயல்பாடுகள் மற்றும் துறையின் இதர பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.



அமைச்சர் மாவட்டம் வாரியாக "முதல்வரின் முகவரி துறை" கீழ் பெறப்பட்ட மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டு, நிலுவையில் உள்ள மனுக்களின் மீது துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

அமைச்சர் கிராமப்புற கால்நடை விவசாயிகளுக்கு சிறந்த முறையில் கால்நடை மருத்துவம் மேற்கொள்ளும் நோக்கத்தோடு, துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு உட்கட்டமைப்பு பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர அறிவுறுத்தினார். மேலும், கால்நடைகளை நோய்களில் இருந்து காத்திட மேற்கொள்ளப்படும் அனைத்து தடுப்பூசிப் பணிகளையும் தங்கு தடையின்றி செயல்படுத்திட அறிவுரை வழங்கினார்.

அமைச்சர் அவர்கள் பசுந்தீவனம் ஆண்டு முழுவதும் கிடைக்கும் நோக்கில், பசுந்தீவன உற்பத்தியை அதிகரித்திட செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங் களை குறித்து ஆய்வு மேற்கொண்டு, கிராமப்புற நிலமற்ற விவசாயிகளின் கால்நடைகளுக்கு பசுந்தீவனம் ஆண்டு முழுவதும் கிடைத்திட வலியுறுத்தினார். மேலும், துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் கால்நடை பண்ணைகளின் செயல்பாடுகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டு, இப்பண்ணைகள் வாயிலாக கிராமபுற கால்நடை விவசாயிகள் பயன்பெற ஏதுவாக பண்ணைகள் செயலாற்றிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் அவர்கள், கிடேரி கன்றுகள் பிறப்பினை அதிகரிக்கும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டு வரும் பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து செயற்கை முறை கருவூட்டலின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். வருடத்திற்கு ஒரு கன்று எனும் இலக்கினை அடைவது குறித்து கால்நடை வளர்ப்போருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், சிறந்த கால்நடை பராமரிப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாடு மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

அமைச்சர் அவர்கள், கால்நடை மருத்துவ சேவைகள் கிடைக்காத தொலைதூர கிராமப்புற பகுதிகளில் கால்நடை மருத்துவ சேவைகளை வழங்கும் பொருட்டு செயல்படுத்தப்பட்டு வரும் நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, அனைத்து ஊர்திகளும் ஆண்டு முழுவதும் சேவைகள் வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அரசு செயலாளர் மரு.ந. சுப்பையன், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் இயக்குநர், இரா. கண்ணன் துறையின் கூடுதல் இயக்குநர்கள், மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்பு!

# திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி, மே. 20-

திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



திருச்சி தெற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் 22.05.2025 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் சத்திரம் பேருந்து நிலையம் வி.என். நகர், திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில்" மாவட்ட அவைத்தலைவர் என். கோவிந்தராஜன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர், மண்டல பொறுப்பாளர் கே.என்.நேரு அவர்கள் பங்கேற்று வருகிற 2026 சட்ட மன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை வழங்குகிறார்.

இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர், தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில்

# ஒருங்கிணைந்த ஈரோடு மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!

ஈரோடு, மே 20-

ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்து சாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஈரோடு ஒருங்கிணைந்த மாவட்டத்தில் 2025ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை குறித்து ஆலோசிப்பதற்கான மாவட்ட வழக்கறிஞர் அணியின் நிர்வாகி கள் கூட்டம் மூத்த வழக்கறிஞர் சட்டத் துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி தலைமையிலும், மாநில வழக்கறிஞர் அணிகளின் நிர்வாகிகள் முன்னிலையிலும் 25.5.2025 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் ஈரோடு மேட்டுக்கடை, தங்கம் மஹாலில் நடைபெறவுள்ளது.

எனவே இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட ஒருங்கிணைந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் , வழக்கறிஞர்கள்



அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தனது அறிக்கையில்கூறியுள்ளார்.



திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, வெள்ளகோவிலில் நகர எஸ்.என்.எல்.யு. நினைவு அறக்கட்டளை, வெள்ளகோவில் நகர தி.மு.க. மற்றும் வெள்ளகோவில் கலைத்தாய் சிலம்ப பயிற்சி பள்ளி இணைந்து நடத்திய இலவச சிலம்பாட்ட சிறப்பு பயிற்சியில் பங்கேற்ற குழந்தைகளுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுக் கோப்பைகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட துணைச் செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், நகர கழக செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம், ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.சந்திரசேகர் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், பேரூர் கழக செயலாளர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றியம் முண்டாசு புறவடை அதியமான் கோட்டை ஊராட்சியில் திருநங்கைகள் குடியிருப்புக்கு பேருந்து வசதி மற்றும் குடிநீர்வசதி வேண்டி அவர்கள் கோரிக்கையை ஏற்று தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு உடனடியாக அப்பகுதிக்கு குடிநீர் வசதி ஏற்பாடு செய்தார். விரைவில் பேருந்து சேவையும் செய்து தருவதாக உறுதி அளித்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் ஏ.எஸ் சண்முகம்,மாவட்ட நிர்வாகி ஆறுமுகம்,நடராஜ், ராஜகோபால், எம்.பி.கௌதம், வீரமணி, மகேஷ், மோகன், வெங்கடேசன்,மற்றும் அரசு அதிகாரிகள் இருந்தனர்.